MODULE 1

# டிஜிட்டல் உரிமைகளும் கடமைகளும்

## பதிப்பு

முதற் பதிப்பு மார்ச் 2020

பிரசுரித்தவர்கள்:
இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவின் **(NCEASL)** மைனர்மட்டர்ஸினால் **(MinorMatters)** பிரசுரிக்கப்பட்டது.

வலையமைப்பு: **www.minormatters.org**

நூலாசிரியர்: நாலக்க குணவர்தன

செயல் திட்ட ஒருங்கிணைப்பு:

யாமினி ரவீந்திரன், சட்ட மற்றும் ஆலோசனை இயக்குனர்
ஷலோமி டானியல், சட்ட மற்றும் ஆலோசனை ஒருங்கிணைப்பாளர், சமய சுதந்திரம் மற்றும் சமூகநீதி ஆணைக்குழு
அக்ீனா பலிகவதன, ஊடக தந்திரோபாய அலுவலகர், சமய சுதந்திரம் மற்றும் சமூகநீதி ஆணைக்குழு

முகப்புத்தக வடிவமைப்பு: சஞ்சயன் அய்யாதுரை

பக்க ஒழுங்கமைப்பு மற்றும் வடிவமைப்பு: சேனல் ஜேசுடியன்

Commons Attribution-ShareAlike 3.0 IGO (CC-BY-SA 3.0 IGO) license
எனும் திறந்த அனுகல் மூலமாக இப்பிரசுரிப்பை பெற்றுக்கொள்ளமுடியும்.
http://creativecommons.org/licenses/by-sa/3.0/igo/

பொறுப்புத் துறப்பு:
இப் பிரசுரங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆராய்ச்சி மற்றும் கருத்து என்பவை பங்களிப்பாளர்கள் மற்றும் நூலாசிரியரால் வெளிப்படுத்தபட்டவை.அது இலங்கை தேசிய கிறிஸ்தவ மறு பிரவேச கூட்டணியினுடையதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அதற்கு இவ்வமைப்பு பொறுப்புக்கூறாது.

# டிஜிட்டல் உரிமைகளும் கடமைகளும்

கல்வி, வேலைவாய்ப்பு, சமூகமயமாதல், சமூக ஒன்று திரட்டல், பொருட்கள் கொள்வனவு மற்றும் இன்னும் பல தேவைகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்ளும் பொருட்டு எமக்கும் இணைய சேவைகளுக்குமிடையிலான நெருங்கிய வாழ்வு ஒருபோதுமில்லாதவாறு மிக வேகமாக அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதனொரு பிரதிபலிப்பாகவே எமது டிஜிட்டல் உரிமைகள் பற்றிய விடயம் மிக முக்கிய இடத்தை வகித்து வருகிறது.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவனது தேவைக்கேற்ப வகையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தையும் சேவைகளையும் தமக்குத் தேவையான விதத்தில் வித்தியாசமான முறையில் பயன்படுத்துவதற்கான உரிமைகளும், சுதந்திரமும் உண்டு, இருப்பினும் அத்தொழில்நுட்பங்களை பொறுப்புடனும் ஒழுக்க விழுமியக் கடப்பாடுகளுடனும் பயன்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும்.

டிஜிட்டல் தொழில்நுட்பமானது இரு முனைகளைக் கொண்டதொரு விடயமாகும். இதனை உபயோகிப்பவரும் அவரது நோக்கத்தையும் பொறுத்து இவற்றினைக் கொண்டு மனித உரிமைகளை மேம்படுத்தவும், நடைமுறைப்படுத்தவும் அதேவேளை அவற்றை மீறவும் முடியும். டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் பயனாளிகளான நாம் அது பற்றிய தெளிவினைப் பெற்றிருப்பது மாத்திரமன்றி அது ஏற்படுத்தக்கூடிய பின் விளைவுகள் பற்றியும் அறிந்திருப்பது மிகவும் முக்கியமான விடயமாகும். இதன் பயனாகவே இவைகளால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை எம்மால் தடுக்க அல்லது குறைத்துக் கொள்ள முடியுமாக இருக்கிறது.

உதாரணத்திற்கு பின்வரும் விடயங்களை எடுத்துக் கொள்ளலாம், எமது தரவுகளை அரசாங்கம் அல்லது முகப்புத்தகம் மற்றும் கூகுள் போன்ற இணையதள நிறுவனங்கள் பயன்படுத்திக் கொண்டிருப்பது எமக்குத் தெரியுமா? எமது தரவுகள் நியாயமான, கவனமான முறையில் பயன்படுத்தப்படுகிறதா? அல்லது எமது அறிவுக்கு எட்டிய வகையில் அல்லது எமது விருப்பத்துடனேயே இந்த தரவுகள் மற்றவர்களுடன் பகிரப்படுகிறதா? (சில வேளைகளில் விற்பனையும் செய்யப்படலாம்). அரசாங்கங்கள் எமது தனிப்பட்ட மின்னஞ்சல் கணக்குகள் மற்றும் ஏனைய தொடர்பாடல்கள் பற்றிய விடயங்களை கண்காணிக்க பரந்தளவிலான மின்னியல்சார் பொறிமுறைகளைக கையாளுகின்றனவா?

பல நாடுகளில் பாரியளவிலான சட்டதிட்டங்கள், நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப பாதுகாப்பு பொறிமுறைகள் நடைமுறையில் இருந்தாலும் கூட அரசாங்கம், நிறுவனங்கள் மற்றும் இணையக் குற்றத்தை புரிபவர்களால் எமது தரவுகள் மற்றும இணைய நடவடிக்கைகளை கண்காணிக்கவும் அவற்றில் இடம்பெறும் தொடர்பாடல்களை அவதானிக்கவும் முடிகிறது. ஆகவே, இணையதள பாவனையாளர்களான நாம் எமது இணைய உரிமைகள் மற்றும் பொறுப்புணர்ச்சிகள் பற்றிய சரியான தெளிவினைப் பெற்றிருப்பது மாத்திரமன்றி அவற்றை எந்தவொரு நிலைமையிலும் மீறாத வகையில் நாம் நடந்து கொள்ளவும் வேண்டும்.

மிக முக்கியமான விடயம் யாதெனில், நாம் எமது தரவுகளையும் ஏனைய டிஜிட்டல் சாதனங்களையும் எவ்வாறு முன்னெச்சரிக்கையுடன் பாதுகாப்பது என்ற விடயத்தை அறிந்து கொள்ள வேண்டும். அதே நேரத்தில், எமது செயற்பாடுகள் மற்றவர்களது டிஜிட்டல் உரிமைகளை மீறுபவையாகவோ அல்லது மற்றவர்களுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலோ அமைந்துவிடக் கூடாது. இவ்வாறு செயற்படுவது மற்றவர்களது டிஜிட்டல் பாவனையில் க்'டத்தில் இட்டுச் செல்பவையாக அமைந்துவிடும். இந்த அத்தியாயத்தில், டிஜிட்டல் உரிமைகள் மற்றும் டிஜிட்டல் பொறுப்புகள் தொடர்பான எண்ணக்கருக்களை நாங்கள் ஆராய்வோம். தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் டிஜிட்டல் தகவல்தொடர்பு மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பான அடிப்படை அம்சங்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன.

# முக்கிய சொற்கள்

டிஜிட்டல் உரிமைகள் எனப்படுவது ஒவ்வொருவருக்கும் அவர்களது புரிதல்களுக்கு ஏற்ப வித்தியாசமான விளக்கங்களைக் கொடுக்கலாம் - இவை டிஜிட்டல் (பதிப்பு) உரிமைகள் முதல் டிஜிட்டல் மனித உரிமைகள் வரை காணப்படலாம்.

டிஜிட்டல் மனித உரிமைகள், அநேகமாக டிஜிட்டல் உரிமைகளையே இவை இலகுவாக சுட்டிக்காட்டி நிற்கிறது. மேலும் இவை தனியொருவரின் மனித உரிமைகளான விடயங்களுக்காக அணுகுதல், பாவனை செய்தல், ஒன்றை உருவாக்குதல், டிஜிட்டல் ஊடகங்களில் பிரசுரித்தல் அல்லது கணனிகளையோ அல்லது ஏனைய தொடர்பாடல் சாதனங்களையோ அல்லது தொடர்பாடல் வலையமைப்புக்களையோ பயன்படுத்துவதையும் குறித்து நிற்கும்.

பதிப்புரிமை எனும் விடயத்தை நோக்குமிடத்து, டிஜிட்டல் உரிமைகள் எனப்படுவது பதிப்புரிமை செய்யப்பட்ட டிஜிட்டல் வேலைகளுக்கும் (திரைப்படம், இசை மற்றும் கலை), கணனி, வலையமைப்பு மற்றும் இலத்திரனியல் சாதனங்களுக்கும் இடையிலான, பாவனையாளர் அனுமதிக்கும் தொடர்பினையும் விபரிப்பதாக அமைகின்றது.

டிஜிட்டல் உரிமை முகாமைத்துவம் எனப்படுவது டிஜிட்டல் முறையில் கோப்பாக சேமிக்கப்பட்ட சாதனங்களை பாதுகாப்பதற்கான ஒழுங்கு படுத்தப்பட்ட ஒரு முறைமையாகும். இவற்றில் டிஜிட்டல் தொழிநுட்ப முறையினூடாக சேகரிக்கப்பட்டு பகிரப்பட்ட டிஜிட்டல் இசை மற்றும் திரைப்படங்கள் போன்றவைகளும் ஏனைய டிஜிட்டல் முறையில் சேகரிக்கப்பட்டு பகிரப்பட்ட தரவுகளும் அடங்கும்.

இவ் ஆவணத்தில் டிஜிட்டல் உரிமைகள் எனப்படம் போது நாம் டிஜிட்டல் மனித உரிமைகளை குறிப்பிடுகிறோம் டிஜிட்டல் பதிப்புரிமையை அல்ல.



Source: http://www.ictliteracy.info/

## மனித உரிமைகளும் டிஜிட்டல் உரிமைகளும்

எல்லா வகையான டிஜிட்டல் உரிமைகளும் அடிப்படை மனித உரிமைகளின் கட்டமைப்பிற்குள் மிகத்திடமாக வேரூன்றி இருப்பதோடு அவை வரலாற்று ரீதியாக வெவ்வேறு சமூகங்களினால் வேறுபட்ட கலாசாரத்திற்கு இணங்க உருவாக்கப்பட்டவையாகும்.

மனித உரிமைகள் எனப்படுவது எல்லா மனிதர்களுக்கும் இயற்கையாகவே, சாதி, மதம், தேசிய இனம், குலம், மொழி அல்லது ஏனைய எந்த வகையான பாகுபாடுகளுமின்றி மனிதன் மனிதனாக வாழ்வதற்காக கிடைக்கப்பட்ட உரிமைகள் ஆகும். மனித உரிமைகள் எனப்படுவதில் உள்ளடங்குபவை வாழ்வதற்கான உரிமை மற்றும் சுதந்திரங்கள், அடிமைத்தனம் மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமைகள், தனது சொந்தக் கருத்துக்களை தெரிவிப்பதற்கான சுதந்திரம், கல்வி கற்றல் மற்றும் வேலை செய்வதற்கான சுதந்திரம் உள்ளிட்ட மேலும் சிலவற்றையும் குறிப்பிடலாம். இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் எத்தகைய பாகுபாடுகளுமின்றி இவ் உரிமைகளை அனுபவிப்பதற்கான சுதந்திரம் உள்ளது.

இவ் உரிமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள மிக முக்கியமாக ஆவணமாக மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தைக் இங்கு நாம் குறிப்பிட்டாக வேண்டும். உலகத்தின் பல பிரதேசங்களிலிமிருந்து பலதரப்பட்ட சட்ட வரைஞர்களினாலும் பல்வேறு கலாசாரங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாலும் வரையப்பட்ட இந்த சர்வதேசப் பிரகடனமானது பிரான்ஸின் தலைநகர் பாரிசில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கூட்டத் தொடரில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. மேலும் இது முழு உலகுக்கும் பொதுவானதொரு நியமமாகவும் கணிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனம் 30 விதமாக சர்வதேச ரீதியாக பாதுகாக்கப்பட வேண்டுமென ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளான கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம், சித்திரவதை மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமைகள், அந்தரங்கம் மற்றும் தனிப்பட்ட ரகசியங்களைப் பாதுகாப்பதற்கான உரிமைகள் மற்றும் கல்வி கற்றுக் கொன்வதற்கான உரிமைகள் என்பவற்றையும் எடுத்துக் கூறுகிறது. மேலும் இவ் உரிமை பிரகடனமானது 500 க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டும் உள்ளது.

இவ் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கென பலதரப்பட்ட சர்வதேச மனித உரிமை சாசனங்கள் மற்றும் ஏனைய சட்ட ஏற்பாடுகளும் 1945 ஆம் ஆண்டு முதலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவற்றின் உதவியுடனையே சர்வதேச மனித உரிமைச் சட்டங்களும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இச்சாசனங்களை உலகிலுள்ள அநேகமான நாடுகள் (இலங்கை உள்ளடங்கலாக) ஏற்றுக் கொண்டு அதில் கைச்சாத்திட்டுமுள்ளன .

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகம் என்பது உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு நிறுவனமாகும். சுவிட்சர்லாந்தின் தலைநகரான ஜெனீவாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் மனித உரிமைகள் பேரவையானது ஒவ்வொரு வருடத்திலும் மார்ச், ஜூன் மற்றும் செப்டெம்பர் ஆகிய மாதங்களில் தனது வருடாந்த கூட்டத் தொடர்களை நடாத்தி வருகிறது.

கடந்த காலகட்டத்தைப் பார்க்குமிடத்து, சில மனித உரிமைகள் குறிப்பாக இணைய வழி உரிமைகள் இதில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவைகளாவன கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான உரிமைகள், தரவுகளைப் பாதுகாப்பதற்கும் தனியுரிமைப் படுத்துவதற்குமான உரிமைகள் மற்றும் குழுக்களில் ஒன்று சேர்வதற்கான உரிமைகள் ஆகும். மேலும் கல்வி கற்பதற்கும் பல மொழிகளைக் கற்பதற்குமான உரிமைகள், நுகர்வோர் உரிமைகள், விருத்தியடைவதற்காக தங்களை மேலும் திறம்படுத்திக்

கொள்வதற்கான உரிமைகள் போன்றவைகளும் டிஜிட்டல் விடயங்களை மேலோங்கச் செய்வதற்கான உரிமைகளும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள மிகப் பிரதான விடயங்களாகும்.

இணைய வழியில் தொடர்ந்து வரும் தரவு மற்றும் சக்தி வாய்ந்த வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட தொழிநுட்பங்கள் தனியாள் உரிமைகளுக்கும் பிறரது மனித உரிமைகளுக்கும் கடுமையான ஆபத்துக்களை விளைவிக்கக் கூடியவைகளாக அமைகிறது. இணைய தளத்தின் எல்லைக்குட்பட்ட தன்மை தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டங்கள் மற்றும் நிறுவன நடைமுறைகள் என்பவற்றுக்கு சவால் நிறைந்தவையாகவும் அமைகிறது.

இப்புதிய யதார்த்தம் நிறைந்த விடயங்களை மனித உரிமைகள் கட்டமைப்புடன் தொடர்புபடுத்திக் கையாள்வதென்பது இலகுவான காரியம் ஒன்றல்ல. டிஜிட்டல் ஆதிக்கத்துக்கு அல்லது இணையவழிக்கு கூடுதல் உரிமைகள் காணப்பட வேண்டுமா? என சிலர் கேட்கின்றனர்

2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் “மக்கள் இணைய வழியில (Online) வைத்திருக்கும் அதே உரிமைகள் இணைய வழியற்ற (Offline) முறையிலும் பாதுகாக்கப்பட வேண்டும” என்ற தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இது ஐ.நா. உறுப்பு நாடுகளினால் (இலங்கை உட்பட) மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்கதொரு அரசியல் உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டுபவையாக அமைகிறது. சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களில் தற்போது நடைமுறையிலுள்ள கடப்பாடுகளின்படி, அரசாங்கங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமைகள், தனியுரிமைப் பாதுகாப்பு மற்றும் இணையதள (Online) உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளை வகுப்பதற்கான உறுதிப்பாடுகளையும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இத்தீர்மானது ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளையும் பின்வரும் விடயத்தைக் கேட்டு நிற்கிறது. “தேசிய ஜனநாயக மற்றும், வெளிப்படையான நிறுவனங்கள் ஊடாக அனைத்து வகையான இணையதள வாயிலான சுதந்திரங்கள், தனியுரிமைகள், மற்றும் பிற மனித உரிமைகள் ஆகியவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு அமைவாக இணைய பாதுகாப்புக்கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். சட்ட விதிகளை அடிப்படையாகக் கொண்டு இணையப் பயன்பாட்டுச் சுதந்திரத்தையும் அவற்றின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் பொருட்டு, அவை தொடர்ந்தும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வளர்ச்சியினை உருவாக்கும் ஒரு துடிப்பு மிக்க சக்தியாகவும் இருக்க முடியும் ”.



[1] Full text at: https://www.un.org/en/universal-declaration-human-rights/index.html
[2] A non-legal overview of these can be found at: https://www.un.org/en/sections/issues-depth/human-rights/
[3] Official website of HN Human Rights Council: https://www.ohchr.org/EN/pages/home.aspx

# நெறிமுறை என்றால் என்ன?

நெறிமுறை எனப்படுவது பிரச்சினை ஒன்றினைத் தீர்த்து வைத்துக் கொள்வதற்கான படிப்படியான முயற்சிகள் அல்லது சில வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதைக் குறிக்கிறது. இவை அநேகமாக தரவுகளை செயற்படுத்துவது, கணக்கிடுதல் மற்றும் கணினி மற்றும் கணிதவியல் சார்பான விடயங்களைக் குறித்து நிற்கிறது. ஒரு நெறிமுறையானது சில வேளைகளில் தரவுகளை திரிவுபடுத்துவதையும் குறிக்கும், அதாவது புதிய வகையான தரவுகளை உள்ளீடு செய்தல், குறிப்பிட்ட ஒரு விடயத்தைத் தேடுதல் அல்லது ஒரு விடயத்தை கையாள்தல் என்பவற்றையும் குறிப்பிடலாம்.

Source: https://www.techopedia.com/definition/3739/algorithm

## டிஜிட்டல் மனித உரிமைகள் என்றால் எவை?

இப்பகுதியில் இருந்து டிஜிட்டல் உரிமைகள் என குறிப்பிடப்படுவது டிஜிட்டல் மனித உரிமைகளை குறிக்கின்ற அதேவேளை டிஜிட்டல் மனித உரிமைகளை அல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் இவை இரண்டுக்கும் தொடர்புகள் இல்லாமலுமில்லை. அவற்றிற்கு இடையிலான தொடர்புகளை பிறிதொரு கலந்துரையாடல் மூலம் அவதானிக்க வேண்டிய தேவையும் எமக்கு உண்டு.

உலகளாவிய வலை தளம் (World Wide Web) எனப்படுவது புவியியல்சார் இடைமுகம் சார்ந்த தொழில்நுட்ப அம்சமாகும், அதனையே தற்காலத்தில் அதிகளவிலான மக்கள் பயன்படுத்தியும் வருகின்றனர். இது 1989 ஆம் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப முறைமையாகும். முதல் அரை தசாப்தத்தில், குறிப்பாக 1990 களில் எம்மில் அதிகளவிலானோர் வலைத்தளங்களை பாவிக்க முடியாத நிலையொன்று காணப்பட்டது – புதியதொரு இணையதள உள்ளீடுகளை உருவாக்குவதற்கு பரந்துபட்ட நிகழ்ச்சித்திட்ட அறிவின் தேவை உணரப்பட்டது. பாவனையாளர்கள் தங்களது இணைய உள்ளீடுகளை மின்னஞ்சல் மற்றும் கலந்துரையாடல் பகுதிகளிலேயே உருவாக்க வேண்டிய நிலையும் காணப்பட்டது. அக்காலத்தில் காணப்பட்ட மிகப்பெரும் பிரச்சினையாக அமைந்தவை யாதெனில் இணையதள பாவனையில் எவ்வாறு அதிக மக்களை பங்குபற்றச் செய்வது என்பதாகும். இணையதள பாவனையின் பயன்பாடு அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மிக அதிகளவில் விருத்தியடைந்தது. 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மனித குடித்தொகையில் சுமார் அரைவாசியினர் இணைய தளத்தில (Online) கால் தடம் பதித்தனர்: ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (UN's International



Telecommunication Union) கணக்கெடுப்பின்படி, 51.2 வீதமான உலக சனத்தொகை அல்லது 3.5 பில்லியன் மக்கள் இந்த இணையதள வசதிகளை பாவித்ததாகக் கூறப்படுகிறது. ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் இணைய தளங்களை பாவிப்பவர்களின் விகிதாசாரம் சுமார் 47 வீதமாகவும் காணப்பட்டது. இதன் அர்த்தம் யாதெனில் இணையப் பயன்பாட்டுக்கான கேள்வி முன்னொரு போதும் இல்லாததைவிட தற்போது மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது, இருந்த போதிலும் இவ் வசதி வாய்ப்புகளை பயன்படுத்த முடியாத மற்றும் ஒரு சாரார் காணப்படுவதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

சமூக வலைத்தளங்களின் உதயத்தின் பின்னரான 2000 ஆண்டுகளின் நடுப்பகுதியில், இணைய தளத்தைப் பயன்படுத்தும் எந்தவொரு நபரும் தங்களுடைய இணைய பதிப்புக்களை பதிவிடக் கூடிய நிலை உருவானது. இவை புதிய சந்தர்ப்பங்களை வழங்கியது மட்டுமல்லாமல் புதிய சவால்களையும் உருவாக்கியது என்பதை மறுப்பதற்கில்லை.

முன்னேற்றத் தொடர்பாடல்களுக்கான அமைப்பு(The Association of Progressive Communication – APC) என்பது 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பாகும். இந்நிறுவனத்தின் பிரதான நோக்கங்களாக மனித உரிமைகள் மேம்பாடு, சமாதானத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் நிலைபேறு தன்மையை உருவாக்கும் வேலைத்திட்டங்களில் பணிபுரிபவர்களின் தொடர்பாடல் கட்டமைப்புக்களை உருவாக்குதல் குறிப்பாக இணையதளத்தை செயலிகளை அடிப்படையாகக் கொண்ட முறையினை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டே உருவானது. இவர்கள் இணையதள உரிமைப் பட்டயம் ஒன்றினை உருவாக்கி பின்வரும் விடயங்களை அவற்றில் உள்ளடக்கினர்.

- அனைவருக்கும் இணையதளத்தை அணுக வசதியளித்தல்
- கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் குழுக்களில் பங்கு பற்றுவதற்குமான உரிமைகள்
- அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள்
- பகிர்ந்து கொள்ளப்பட்ட கற்றுக் கொண்ட விடயங்கள் மற்றும் படைப்பாக்கங்கள் - இலவச தடைகளற்ற திறந்த மென்பொருட்கள் மற்றும் தொழிநுட்ப வசதிகளை உருவாக்குதல்.
- தனியுரிமை, கண்காணிப்பு மற்றும் மறைகுறியீடாக்கல்
- இணையதள ஆளுமை
- விழிப்புணர்வு, பாதுகாப்பு மற்றும் உரிமைகளை அறிந்து கொள்ளல்



தகவல் தொடர்பாடல் தொழிநுட்பமானது படிப்படியாக வளர்ந்து வருவதனையிட்டு, டிஜிட்டல் வாய்ப்புகளும் சவால்களும் மாற்றமடைந்து கொண்டே செல்கிறது. பல ஆண்டு காலமாக டிஜிட்டல் உரிமைகளுக்கான விவாதங்களை மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் சிவில் சமூக குழுக்கள் போன்றோர் முன்வைத்துக் கொண்டே வருகின்றனர்.

[4] The promotion, protection and enjoyment of human rights on the Internet. UNHRC Resolution A/HRC/32/L.20. Adopted on 27 June 2016. http://ap.ohchr.org/documents/dpage_e.aspx?si=A/HRC/32/L.20
[5] https://news.itu.int/itu-statistics-leaving-no-one-offline/

“இணையதளம் என்பது உலகளாவிய பொது வெளியாகும். அது திறந்த, எளிதான மற்றும் எல்லோராலும் பயன்படுத்தக்கூடிய வகையில் அமைய வேண்டும். அதிகளவான ஆட்கள் இதில் பிரவேசிப்பதைப் போன்றே அதிகளவானோர் இவற்றிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளனர். பூகோளமயமாதலைப் போன்றே இணையதள பாவனையின் மூலம் பலதரப்பட்ட சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இடம்பெறுகின்றது. எது எவ்வாறிருப்பினும் இணையதள வசதிகளும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப செயற்பாடுகளும் சமூக ஒன்று திரட்டல், சமூக அபிவிருத்தி, நீதியற்ற நிலையை எதிர்த்தல் மற்றும் வித்தியாசமான படைப்பாற்றல்களையும் புதிய உருவாக்கல்களையும் தெரியப்படுத்துவதற்கான சக்திவாய்ந்த ஒரு ஆயுதம் ஆகும் ”.

ஆசிய பசுபிக் பிராந்திய இணையதள உரிமைகள் பட்டயத்தின் (APC) ஆரம்ப வசனங்கள், 2006.

6 APC Internet Rights Charter, 2006: https://www.apc.org/en/pubs/about-apc/apc-internet-rights-charter

## பால்நிலைப் பரிமாணமும் இணையதள பாவனையும்

இணையதள பாவனையில் ஆண்கள் மற்றும் பெண்களின் பாவனைகள் வித்தியாசமானதாக அமைகிறது, அதே போன்று அவர்களது இணையதள அனுபவங்களும் வேறுபட்டதாகக் காணப்படுகிறது.

முதலாவதாக, தனிநபர் வருமானமோ அல்லது சொந்த நாட்டு வித்தியாசங்களோ இல்லாமல் அதிகமான பெண்கள் இணையதள பாவனையில் குறைவாகவே காணப்படுகின்றனர். உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் 2018 ஆம் ஆண்டு LIRNEasia எனும் அமைப்பினால் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் 34மூ ஆன 15-65 வயதுக்குட்பட்ட பெண்கள் அதே வயது பரம்பலையுடைய ஆண்களை விட குறைந்தளவிலேயே இணையதளத்தினைப் பயன்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவின் இணையதளம் மற்றும் கையடக்கத் தொலைபேசி அமைப்பு 2017 இல் இந்தியாவின் இணைய தளம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், அவ்வாண்டில் 30 வீதமான பெண்களே இணையதளங்களைப் பயன்படுத்துவதாக அறிய முடிகிறது.

பெண்கள் இணைய தளமொன்றுக்குள் நுழைந்தவுடன் பலதரப்பட்ட இணைய வகை இம்சைகளுக்கு ஆளாகின்றனர், இதற்கான காரணம் அவர்கள் பெண்களாக இருப்பதே தவிர வேறொன்றுமில்லை. இன்னும் சில இடங்களில் இப்படிப்பட்ட சம்பவங்கள் மிகவும் அதிகளவாகக் காணப்பட்டும் உள்ளது (இந்த இம்சைகள் பற்றிய தெளிவான பல விளக்கங்கள் மற்றைய பகுதியில் வழங்கப்பட்டுள்ளது).

பெண்கள் உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பலர் டிஜிட்டல் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய பல விடயங்களை பால்நிலை அணுகுமுறையிலும் பெண்ணிய பார்வைகளினூடாகவும் வழங்கியுள்ளனர். அவர்கள் இணையதள பாவனை பற்றிய அங்கீகாரத்தினையும் புகழாரத்தினையும் வழங்கக் கூடிய முழுமையான அணுகுமுறை ஒன்றின் தேவையினை மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தி நிற்கின்றனர். இதன் பொருள் யாதெனில் பெண்களை இலக்கு வைத்து அவர்களை இம்சைகளுக்கு உட்படுத்துவது தற்போது இணைய வழியில் மற்றும் சமூகங்களில் பரந்துபட்டு அறியப்பட்டதாகக் கொள்ளப்பட வேண்டும். இவற்றினை வெற்றிகொள்ள இரண்டு கோளங்களிலும் மிக உறுதியான பதில்கள் தேவைப்படுகிறது.

இணையதளம் பற்றிய பெண்ணியல் பண்புகளானது பெண்கள் இயக்கங்களுக்கான கட்டமைப்பு ஒழுங்கொன்றினை முன்வைப்பதோடு மாத்திரமல்லாமல் தொழில்நுட்பம் சம்மந்தமான சவால்களையும் கோடிட்டுக் காட்டுகிறது. மேலும் இவை பால்நிலை மற்றும் இனப் பெருக்கம் சம்மந்தமான பார்வையினூடாக இணையம் சம்மந்தமான உரிமைகளை நோக்குகிறது. 2014 ஆம் ஆண்டு முதன் முதலாக வரையப்பட்ட இந்த வரைபு, 2016 ஆம் ஆண்டு மிகவும் பிந்திய பதிப்பாக அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி பிரசுரிக்கப்பட்டது. இந்த நிகழ்வானது சமூக நிறுவனக் குழுக்களின் உலகளாவிய வலையமைப்பான முன்னேற்றத் தொடர்பாடல்களுக்கான அமைப்பினால் நடைமுறைப் படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது மொத்தமாக 17 பண்புகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் இவை ஐந்து பெரும் பிரிவுகளுக்குள்ளும் உட்படுத்தப்பட்டுள்ளன, அவையாவன : அணுகும் வசதி, நகர்வு, பொருளாதாரம், விடயங்களைத் தெரியப்படுத்தல் மற்றும் வடிவமாக்கல்.

முகவுரை வாசிப்பு: " பெண்ணிய வலையமைப்பானது பெண்களின் உரிமைகளை எந்த வகையான வேறுபாடுகளுமின்றி - முழுமையாக அனுபவிக்கவும், ஆணாதிக்கமில்லாத எல்லா வகையான இன்பமயமான விளையாட்டில் ஈடுபடவும் பெண்களை வலுப்படுத்துகிறது. மேலும் இது, வித்தியாசமான உண்மை நிலைமைகள், குறிப்பாக வயது, உடல் பலவீனம், பாலியல் மற்றும் பாலினம், அடையாளங்கள், சமூக பொருளாதார அரசியல் இருப்பிடங்கள், மத நம்பிக்கைகள், இனத்துவ தோற்றப்பாடுகள், மற்றும் தனித்துவங்கள் போன்றனவற்றை ஒன்றிணைக்கிறது"

இதில் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயம் யாதெனில் இணையவழி என்பதில் எழுகின்ற சவால்கள் இணையமற்ற விடயத்தையும் சார்ந்து இருப்பதாகும் அல்லது உலக நடைமுறையில் தற்போது இடம்பெறும் ஒரு விடயம் எனவும் குறிப்பிடலாம். இருந்த போதும் இணையவழி மற்றும் இணையவழி அல்லாத (online and offline) ஆன இரண்டும் அடிக்கடி மாறுபட்டு பயன்படுத்தப்படுவதையும் நாம் அவதானிக்கலாம். ஆகவே இவை பற்றிய சரியான தெளிவுகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பரந்துபட்ட ஆய்வுகள் மிகவும் அவசியமானதாகக் காணப்படுகிறது.

இணைய பாவனை பற்றிய பெண்ணிய கருத்துக்களை பார்க்குமிடத்து பின்வரும் வினாக்கள் எமது மனதில் எழலாம்.

- டிஜிட்டல் சாம்ராஜ்யத்தை அணுகும் வசதி யாருக்கு காணப்படுகிறது?
- வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கும் இந்த சாரார் தங்களது கருத்துக்களை எந்த விதமான கெடுபிடிகளும் இல்லாமல் இலகுவாக தெரிவிக்கக்கூடிய நிலையில் காணப்படுகின்றனரா?
- அவ்வாறு செய்வதால் ஏற்படும் பின்விளைவுகள் யாது? குறிப்பாக வலுவிழந்த கூட்டத்தில் ஏற்கனவே உள்வாங்கப்பட்டவர்களின் நிலை என்ன?
- இணையதள உள்ளடக்கங்களை யார் உருவாக்குகின்றனர்? யார் வரைகின்றனர்? இது ஒரு உள்ளடக்க முறையின் மூலம் உருவாக்கப்பட்டதா?
- டிஜிட்டல் உலகில் காணப்படும் வாய்ப்புகள் மற்றும் சவால்கள் யாவை? இதில் எல்லோருக்கும் சம வாய்ப்புகளும் வசதிகளும் கிடைக்கப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்த நாம் என்ன செய்யவேண்டும்.



[7] https://lirneasia.net/2019/05/afteraccess-findings-from-sri-lanka-released-in-colombo-today-event-report/
[8] Read all Feminist Principles of the Internet at: https://feministinternet.org/en

“பெண்களை பொது வெளிகளில் உள்வாங்குவது தொடர்ந்து மறுக்கப்பட்டே வந்திருக்கிறது, ஏனெனில் ஆண்கள் அவர்களது “ஆண்மையை” பொது இடங்களில் கட்டுப்படுத்த முடியாது. தொழில்நுட்பப் பாவனையின் அதிகரிப்பின் விளைவாக, பெண்கள் இணையதளங்களில் பிரவேசிப்பதும் தடுக்கப்படுகிறது, ஏனெனில் பெண்கள் இந்த மெய்நிகர் உலகுக்கு வருவதற்கு முன்னரே ஆண்களின் பிரவேசம் அங்கு பரந்துபட்டு காணப்படுவதாகும். இன்னுமொரு விடயம் என்னவென்றால், பெண்கள் அதிகமாக ஒன் லைன் பாவனையிலிருந்து விலக்கப்படுவதற்கு அல்லது விலகுவதற்குக் காரணம் அவர்கள் இணையதள பாவனையில் சிறுபான்மைக் குழுவாக இருப்பதாகும்”.

நிகாட் டாட், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் மற்றும்
நிறைவேற்றுப் பணிப்பாளர் - டிஜிட்டல் உரிமைகள்
மன்றம், பாகிஸ்தான்

# இணைய வழியில் (ஒன்லைனில்) கருத்துச் சுதந்திரம்

மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தின் 19 ஆவது அத்தியாயத்தில் கருத்துச் சுதந்திரம் பற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பேசுவதற்கான உரிமை, பிரசுரிக்கும் மற்றும் ஒளிபரப்புவதற்கான உரிமைகள், எல்லைகளற்ற தகவல்களைப் பெற்றுக் கொள்ளவதற்கான உரிமை போன்றவை உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன. இவை டிஜிட்டல் யுகத்தின் மிக முக்கியமான உரிமைகளாகும்.

இணையதளமானது உலக அரங்கில் மிகவும் பயன்மிக்கதொரு விடயமாக தற்கால உலகில் மாற்றமடைந்துள்ளது, தனிநபர் கலந்துரையாடல்கள், கருத்துக்களை வெளியிடல், தகவல் பரிமாற்றம் மற்றும் பல பெரும் விடயங்களில் ஒளி பரப்பு செய்யும் ஒரு தளமாகவும் காணப்படுகிறது. அது மாத்திரமன்றி ஜனநாயக நீரோட்டத்தில் மனித உரிமைகள் பற்றி பேசவும் அரசியல், பொருளாதார முன்னேற்ற விடயங்களில் சமூகத்தை ஒன்று திரட்டவும் மிக முக்கிய ஆயுதமாகக் காணப்படுகிறது.

எது எவ்வாறிருப்பினும், இப்படிப்பட்ட சமூகத்துக்கு பல நன்மைகளை விளைவிக்கும் இணையதளங்கள் சில வேளைகளில் தடைப்படுத்தப்பட வாய்ப்பும் காணப்படுகிறது. உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் இணையதளத்துக்கு நாம் வழங்கும் உள்ளீடுகளையும் உள்ளடக்கங்களையும் தடுத்தல் அல்லது இணையதளத்தை முற்றாக தடை செய்தல் அல்லது பிடிவாதமாக இணையதள நடவடிக்கைகளையும் கண்காணித்தலும் அவற்றை முடக்குதலையும் குறிப்பிடலாம்.

ஆகவே இதில் காணப்படும் வாய்ப்புக்களையும் சவால்களையும் நாம் அறிந்து கொள்வது மிக முக்கியமானதொரு விடயமாகும்.

தற்கால உலகில் இணையதளமானது, குறிப்பாகக் கூறுமிடத்து சமூக வலைதளங்கள் மிகப் பாரிய தாக்கங்களையும் பங்களிப்புகளையும் செலுத்துவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதிலும் குறிப்பாக உலகில் எந்த மூலையில் இருக்கும் ஒருவரையும் இப் பூகோளத்தில் இருக்கும் இன்னுமொருவருடன் மிகவும் இலகுவாக இணைக்கக் கூடிய ஆற்றல் இதற்கு காணப்படுவது சிறப்பம்சமாகும். இவ்வாறான செயற்பாடுகள blogs, post அல்லது comments, Facebook, twitter, போன்ற சமூக வலைதளங்களில் காணலாம். உதாரணத்துக்கு குறிப்பிடுமிடத்து Instagram, YouTube போன்றவற்றைக் குறிப்பிடலாம். இன்னும் பல எண்ணிக்கையிலான சமூக வலைத்தளங்கள் கட்டணங்கள் ஏதுமின்றி இலகுவாக இணையக்கூடிய வசதிகளையும் வழங்குகிறது.

அண்மைய காலங்களில் இணையதளங்களில் விடயங்களை பதிவிடுவதற்கும் பரப்புவதற்கும் சில வெகுஜன ஊடக நிறுவனங்களுக்கு குறிப்பாக தொலைக்காட்சி சேவைகள், பத்திரிகைகள் போன்ற ஊடகத் துறையினருக்கு மிகவும் சவாலாகக் காணப்பட்டது. இதற்கான காரணங்கள் யாதெனில் இத்துறையில் காணப்பட்ட தொழில்நுட்ப அறிவு இடைவெளி, ஆள் பற்றாக்குறை மற்றும் இத்துறையிலுள்ளவர்களை பயிற்றுவிப்பதற்கு அதிகளவிலான பொருளாதார வசதிகள் தேவைப்பட்டமையாகும். இணைய தளமானது மிகவும் குறைந்த விலையில் அதிக செலவுகள் இன்றி மேற்கொள்ளப்படக் கூடிய ஒரு விடயமாகும்.

மேலும் இவை புவியியல் ரீதியில் நிலத்தொடர்பற்ற சமூகங்களை ஒன்று படுத்தவும் மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய மிக முக்கியமான விடயமாகும். இலவச இணையதள முறையில் காணப்படும் மற்றுமொரு மிக முக்கியமான சிறப்பம்சம் யாதெனில் பார்வையாளர்களை மிக வேகமான முறையில் அடையவும் அவர்களை ஏதோவொரு முறையில் ஒன்றிணைக்கக் கூடியதாக இருப்பதாகும். இது இம்முறையில் காணப்படும் ஒரு வாய்ப்பாகவும் கொள்ளப்படுகிறது. தமது கருத்துக்களை சுதந்திரமான முறையில் வெளிப்படுத்த முடியாத சூழலில் வாழும் ஒருவருக்கு இம்முறையானது மிக இலகுவான முறையில் கருத்துக்களை வெளியிட உறுதுணையாக அமையும்.

கனடா நாட்டிலுள்ள கருத்துச் சுதந்திரத்துக்கான செயற்பாட்டாளாரான லோரா டிரைபின் கருத்துப்படி "இது உண்மையில் மற்றவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தக்கூடிய முறை, தகவல்களை பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல இது இணையதளத்துக்கே உரிய ஜனநாயக முறையுமாகும். மேலும் இதுவே கருத்துக்கள் தெரிவிப்பதற்கான மிகப் பெரும் சொத்தாகும்" எனக் கூறினார்.

இலங்கையில் இணையதளமானது கருத்துச் சுதந்திரத்துக்கான கடைசி எல்லையாகக் காணப்படுகிறது. இலங்கையில் பிரதான ஊடகங்களுக்கான நுழைவு அதன் வாயில் காப்பாளர்களான பதிப்பாசிரியர்கள், உரிமையாளர்கள் போன்றோர்களால் பாதுகாக்கப்படுகிறது, எவ்வாறிருப்பினும் இவர்களில் பலர் பொது நன்மைகளுக்காக செயற்படுபவர்களாகக் காணப்படவில்லை மாறாக தனிநபர் நிகழ்ச்சி நிரல்களை ஊக்குவிப்பவர்களாகவும் அதீத தணிக்கையில் ஈடுபடுபவர்களாகவுமே இருக்கின்றனர். மீண்டும் இந்தப் பின்னணியைப் பார்க்குமிடத்து, இணையதளமானது பிரஜைகளுக்கான மிக முக்கியமான மாற்று வழியாகவே அமைகிறது. பலர் பிரதான ஊடகங்களால் அதிகமாக வெளியில் பேசப்படாத விடயங்கள் அல்லது புறக்கணிக்கப்பட்ட விடயங்களை பொது நன்மைக்காக விவாதிப்பதற்காக வெளியில் கொண்டு வருகின்றனர்.

> "நவீனகால சமுதாயத்தில் இணையதளத்தின் நிலைமாறும் தன்மைக்கு ஏற்ப தகவல்களின் திறந்த தன்மையில் மாற்றம் ஏற்படுவதும் மிக முக்கியமமானதாகும். சமூக பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு உள்ளடக்கங்களின் சவால்களைத் தீர்க்கும் போதும் சுதந்திரமாக கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.."
>
> அத்தியாயம் 13 (ஆலோசனை நிறுவனம்)
> https://www.article19.org/issue/digital-rights/

## வெறுப்புப் பேச்சு – கருத்துச் சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தல்

கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான உரிமை எனப்படுவது ஒரு முழுமையான உரிமை அல்ல - இதற்கு சில நியாயமான வரம்புகளும் பொருந்தும். அனுமதிக்க முடியாத ஒரு வகையான வெளிப்பாடே வெறுப்பினை உண்டாக்கும் பேச்சுக்களாகும்.

வெறுப்பூட்டும் பேச்சுக்கள் ஒன்லைன் மற்றும் ஓப்லைன் உள்ளிட்ட எல்லா இடங்களிலும் காணப்படுவதானது இலங்கை அரசியல் யாப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட சுதந்திரத்தினையும் இலங்கை கையெழுத்திட்ட சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களையும் எளிதில் மீறக்கூடியவொரு செயலாகக் காணப்படுகிறது.

வெறுக்கத்தக்க பேச்சுக்கள் என்பதற்கு பல வியாக்கியானங்கள் வழங்கப்படுகின்றன. பொதுவாகக் கூறுமிடத்து வெறுப்பூட்டும் பேச்சுக்கள் எனப்படுவது இனம், மதம், பாலின அடையாளம் மற்றும் தேசியம் ஆகியவற்றின அடிப்படையில் வெறுப்பை ஆதரிப்பதான செயற்பாடுகள் என்று கூறலாம்.

முக்கியமான விடயம் யாதெனில் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் ஒருவரை புண்படுத்தும் பேச்சுக்களிலிருந்து வேறுபட்டவை, ஆகவே இவை இரண்டையும் ஒன்றுபடுத்தாமல் இரு வேறு திசைகளில் நோக்குவது மிக முக்கியமாகும். உண்மையில் கருத்துச் சுதந்திரமானது அதிர்ச்சிகள், புண்படுத்தல்கள் அல்லது தொந்தரவுளை ஏற்படுத்தும் நிலையை உருவாக்குமிடத்து அவை உண்மையில் செல்வாக்கற்ற ஒன்றாக மாறிவிடுகிறது. பிரபல எழுத்தாளர் சல்மான் றுஸ்தி ஒரு இடத்தில் கூறுகையில் “கருத்துச் சுதந்திரம் என்றால் என்ன? புண்படுத்தும் சுதந்திரம் இல்லாமல் கருத்துச் சுதந்திரம் இருக்காது எனக் குறிப்பிட்டுள்ளார்”.

இலங்கையில் கருத்துச் சுதந்திரம் எனும் விடயம் நெடுங்காலம் நீடித்த போர்க்கால சூழல், மற்றும் யுத்தத்துக்கு பிற்பட்ட காலமான 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான மெதுவாக நகரும் நல்லிணக்க செயற்பாடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே நோக்கப்பட வேண்டும். இலங்கையில் நீடித்திருந்த யுத்த சூழ்நிலையானது இன, மத, மற்றும் அரசியல் ரீதியாக சமூகத்தை பெரிதும் துருவப்படுத்தியுள்ளது. இது மாத்திரமன்றி அச்சமூகத்தை பல்வேறு வகையான தீவிரவாத சிந்தனைகளில் உற்சாகப்படுத்தியுள்ளதாகவும் அமைந்துள்ளது. அரசியல் கட்சிகள் தேசிய இன நல்லிணக்கத்தை வளர்ப்பதற்குப் பதிலாக இந்தப் பிளவுகளைப் பயன்படுத்தியே தங்களது அரசியல் காய் நகர்த்தல்களை மேற்கொள்கின்றன (இதன் முடிவில் வழங்கப்பட்ட சம்பவக் கற்கை 01 இனைப் பார்க்கவும்).

வெறுப்பை ஏற்படுத்தும் பேச்சுக்கள் பற்றிய விடயத்தில் இலங்கையிலுள்ள சட்ட ஏற்பாடுகளை நோக்குமிடத்து அங்கு பாரிய இடைவெளி ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டம் பல சர்வதேச நியமங்களுக்கு ஏற்றாற் போல உருவாக்கப்பட்டிருக்கிறது. பிரச்சினைகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தப்படும் போதுதான் ஏற்படுகிறது. வெறுக்கத்தக்க பேச்சுக்களை எதிர்ப்பதில் முறையான விமர்சனத்தையும் கருத்து வேறுபாடுகளை அனுமதிப்பதும் மிக முக்கியமாகும்.

2005 ஆம் ஆண்டு யுனெஸ்கோவினால் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி “(வெறுப்பூட்டும் பேச்சுக்களுக்கான) எந்தவொரு வரம்புகளும் தன்னிச்சையாக இல்லாமல் சட்டத்தில் குறிப்பிடப்பட வேண்டும். நியாயமான வெளிப்பாட்டின் எந்தவொரு கட்டுப்பாட்டையும் தவிர்ப்பதற்காக அவை “அவசியமானவை”எனும் அளவிடையை பூர்த்தி செய்ய வேண்டும், இதற்கான வரம்புகளும் வரையறைகளும் காணப்பட வேண்டும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இணையதளத்தில் வெறுப்பூட்டும் பேச்சுக்களை எதிர்த்தல்” என்று தலைப்பிடப்பட்ட இந்த ஆய்வறிக்கையில் “இந்த சர்வதேச தரநிலைகளானது கருத்து வெளிப்பாட்டின் வரையறை நியாயமானதாகக் காணப்பட வேண்டும் என்பதோடு இவை அதிகாரத்தைப பயன்படுத்தும் ஒன்றாக அமைந்துவிடக் கூடாது. மறுபுறத்தில் மற்றவர்களின் உரிமைகளை நிலை நிறுத்தும் நோக்கத்தை தவிர…… அந்த நோக்கங்கள் தேசிய பாதுகாப்பு, பொது விழுமியங்கள் அல்லது பொது சுகாதாரமாகவும் இருக்க முடியும்” என்று யுனெஸ்கோ கூறுகிறது.

யுனெஸ்கோ பல வகையான சட்ட ரீதியற்ற முறைமைகளை இணையதள வெறுப்பூட்டும் பேச்சுக்கு எதிராக கையாள முடியும் எனக் கூறுகிறது. சம்மந்தப்பட்ட நபர்கள் தங்களுக்கு சமமான சகபாடிகளுடன் எதிர் பேச்சுக்களில் ஈடுபடலாம், அதே நேரம் சிவில் சமூகக் குழுக்கள் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் இடம்பெறுவதைக் கண்காணிக்கவும், ஆவணப்படுத்தவும், பகுப்பாய்வு செய்யவும் முடியும். மேலும் உத்தரவாதப்படுத்தப்பட்ட இடங்களில் அவ்வாறான விடயங்கள் இடம்பெறுமாயின் அவற்றைத் தொகுத்து ஆவணப்படுத்தி உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரவும் முடியும். இணைய நிறுவனங்களின் உதவியுடன் பிரச்சாரக் குழுக்கள் அவை பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் முடியும் என்று குறிப்பிடுகிறது.

நடுத்தர நீண்ட காலத்தில் வெறுக்கத்தக்க பேச்சுக்கு எதிரான உண்மையான பாதுகாப்பு மனிதர்களின் மனதிற்குள்ளேயே இடம்பெற வேண்டும். பேச்சுச் சுதந்திரத்திற்கான உண்மையான பாதுகாப்பு மனித மனதிற்குள் மட்டுமே உருவாக்கப்பட வேண்டும். இங்குதான் நாம் டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்தவும், வெறுக்கத்தக்க பேச்சை எதிர்க்கக் கூடிய இணையவழி சமூகத்தை வலுப்படுத்துவதும் மிக இன்றியமையாதது ஆகும்.

## வெறுப்பை ஏற்படுத்தும் பேச்சுக்கள் பற்றிய முகப்புத்தகத்தின வரைவிலக்கணம்(FACEBOOK'S)

சமூக விழுமியங்கள் என்று எம்மால் நன்கு அறியப்படும் முகப்புத்தகத்தின் விதிகளின்படி(Facebook's rules), வெறுப்பை ஏற்படுத்தும் பேச்சுக்கள் எனப்படுவது பாதுகாக்கப்பட்ட குணாதிசயங்களான இனம், தேசிய தோற்றம், மதத் தொடர்பு, பாலியல் நோக்கு நிலை, சாதி, பாலின அடையாளம் மற்றும் கடுமையான நோய் அல்லது இயலாமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்கள் மீது நேரடித் தாக்குதல் நடாத்துவது எனக் குறிப்பிடுகிறது". மேலும் இது குடியேற்ற நிலைக்கும் சில பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்குகிறது.

Source: https://www.facebook.com/communitystandards/

## இணையத்தள தணிக்கை

இணையம் ஒரு சிறந்த தளமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. திறந்த இலகுவாக அணுகக்கூடிய நிலையிலுள்ள இணையத்தளம் சமூகங்களின் ஜனநாயக இருப்புக்கு இதுவே அடிப்படை என்ற கருத்து அதன் தாராண்மை தன்மையினை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.


எவ்வாறிருப்பினும் இணையத்தின் பாவனையானது (தவறான பாவனையும்) ஒரு சிக்கலான நிலைமையை உருவாக்கியிருப்பது மட்டுமல்லாமல் குழப்பகரமான நிலைக்கும் தள்ளிவிட்டுள்ளது. எனவே இதன் உண்மையான தன்மை மற்றும் மதிப்புகள் என்பன அதீத ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஜனநாயகத்துக்கான திறந்த இணையத்தளம் எனும் சமூக ஆர்வலர்களைக் கொண்ட குழுவொன்றின் கருத்துப்படி "இணையதளங்களில் அரசியல் மற்றும் சமூக சிந்தனைகள் அதிகரித்துக் காணப்படுவதனால் இணையத்தின் மூலமாகவே சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வான நிலையை குறைக்க முடியம்" எனக் கூறப்பட்டுள்ளது.

தாராண்மைவாத இணையதள படைப்பாளிகள் கல்வியியலாளர்களாக அல்லது தொழில்நுட்பவியலாளர்களாகக் காணப்பட்டனர். அவர்களது படைப்பாற்றல்கள் திறந்ததாகவும் எல்லோராலும் பெற்றுக் கொள்ளக் கூடியதுமாக இருக்க வேண்டும் என வேண்டப்பட்டது.

காலத்துக்கு காலம் இதன் வளர்ச்சி விரிவடைய விரிவடைய இணையத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்ற கேள்வியும் எழத் தொடங்கியது. மேலும் இவை இன்னும் தீர்க்கப்படாத விவாதங்களாகவும் உருவாகியுள்ளது.

தேசிய சட்ட வரையறைகளின் மூலம் தனியொரு அரசாங்கத்தினால் இணையதளமொன்றைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது. இதற்குரிய காரணம் அதன் வடிவமைப்பாகும். ஆனாலும் சில அரசாங்கங்கள் இதனைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் பயன்படுத்துகின்றன, அதன் மூலம் இணையதளத்தின் வெளிப்படைத் தன்மை மங்கலடையும் துர்ப்பாக்கிய நிலை உருவாகிறது. சில ஜனநாயக நாடுகள் டிஜிட்டல் ஊடகங்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல், பொருளாதார, சமூக, பாதுகாப்பு மற்றும் சட்டம் சம்மந்தமான பிரச்சினைகளின் விளைவாக இத்தளங்களை ஏற்கனவே தடை செய்துள்ளன அல்லது தடை செய்வதற்கான முன்னேற்பாடுகளை முன்னெடுக்கின்றன.

இப்படியான நிலைமைகள் இணையதள சுதந்திரம் பற்றிய உலக கலந்துரையாடலுக்கு வித்திட்டுள்ளது, மேலும் இதற்காக நியாயமான கோரிக்கை ஒன்றையும் முன்வைக்கிறது. சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் இணையதளமொன்றை ஏதாவது ஒரு காரணத்துக்காக யாராவது ஒருவர் நிருவாகக் காரணத்துக்காக முடக்க முற்பட்டால், அது ஒரு நியாயமான நடவடிக்கையாக ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்படவே மாட்டாது. மேலும் இது கருத்துச் சுதந்திரத்துக்கு மிகவும் அபாயகரமான ஒரு விடயமாகவும் பார்க்கப்படுகிறது.



"இணையதளங்களில் அரசியல் மற்றும் சமூக சிந்தனைகள் அதிகரித்துக் காணப்டுவதனால் இணையத்தின் மூலமாகவே சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வான நிலையை குறைக்க முடியம்."

ஜனநாயகத்துக்கான திறந்த இணையம்

"இணைய அச்சுறுத்தல்கள், இணையதளத்தில் வெறுப்பை உண்டாக்கும் சம்பவங்கள் மற்றும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் நடவடிக்கை போன்ற விடயங்களில் தற்கால அரசாங்கங்கள் தங்களை ஈடுபடுத்துவதால் மனித உரிமைகளுக்கும் பாதுகாப்புக்கும் இடையில் காணப்படும் வேறுபாட்டை உணர முடியாத நிலை காணப்படுகிறது. உதாரணமாக தேசிய பாதுகாப்பு அல்லது குறியாக்கை நோக்கத்துக்காக சில அநாமோதய கருவிகளின் மூலம் தனிநபர்களின் உரிமைகளிலும் சுதந்திரங்களிலும் சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். இது தனியாள் உரிமைகளுக்கு அச்சுறுத்தலானதாகவும் அமைகிறது. புதிய தொழிநுட்பங்கள் அதிக செயல்திறன் மிக்கவையாகக் காணப்பட்டாலும் அரசாங்கங்களினால் பாதுகாப்பு எனும் நோக்கத்துக்காக கட்டுப்படுத்தப்படும் நிலையும் காணப்படுகிறது. இவை தனியுரிமையையும் சுதந்திரத்தையும் குறைத்து மதிப்பிடுபவைகளாகவும் அமைகிறது ."

இணையதள சமூகத்தினால் வெளியிடப்பட்ட
உலக இணையதள அறிக்கை 2017

## தனியுரிமை

சர்வதேச சாசனங்களைப் போலவே, சர்வதேச மனித உரிமைகள் சாசனத்திலும் (உறுப்புரை 12 இல்) நபர் ஒருவரின் தனிப்பட்ட உரிமைகள் பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. தற்காலத்தில் மிக அதிகமாக பயன்பாட்டிலுள்ள இணையப் பாவனை மற்றும் அவை தொடர்பான நடவடிக்கைகளின் விளைவாக நபர்களின் தனியுரிமை பற்றிய விடயத்தில் புதிய சில குழப்பகரமான சூழல் உருவாகியிருப்பதை எம்மால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மிக உயர்தன்மையானது உரிய நொடிப்பொழுதில் எந்தத் தகவல் தொடர்பாடல்களையும் மேற்கொள்ளக் கூடிய மிக இலகுவான நிலையை உருவாக்கியிருக்கிறது. அதே நேரத்தில் இத்தகைய உயரிய நிலையிலுள்ள தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகள் கண்காணிப்பு, முடக்குதல் மற்றும் தரவு திரட்டு போன்ற விடயங்களின் மூலம் நலிவுற்றதாக மாறக்கூடிய நிலை உருவாகியுள்ளது என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இணைய முறை பாவனையில் முழுமையான தனியுரிமை பாதுகாக்கப்படுகிறது என்ற விடயம் சாத்தியமற்றது – ஏனெனில் எமது ஒவ்வொரு நடவடிக்கைகளும் தரவுகளும் தானாகவே ஏதோவொரு இடத்தில் பதிவு அல்லது சேகரிக்கப்படுகிறது என்ற விடயமே இவ்வாறு கூறப்படுவதற்குக் காரணமாகும், மேலும் இவை தேவையேற்படின் மீள் பெறக்கூடிய நிலையிலும் உள்ளது. இவ்வாறானதொரு நிலை காணப்பட்டாலும் கூட ஏதோவொரு வகையில் தனியுரிமையைப் பாதுகாப்பதற்கான சாத்தியப்பாடுகளும் காணப்படுகிறது என்பதை மறுப்பதற்கு இல்லை. ஆனாலும் இவை உண்மையாகவே பாவனையாளர்களுக்கு பயன்படக்கூடிய வகையில் காணப்படுகிறது என்ற விடயத்தை உறுதிப்படுத்தக்கூடிய பொறுப்புதாரிகளாக சேவை வழங்குனர்கள், தொழில்நுட்பப் பாவனையாளர்கள் மற்றும் அரச சட்ட நெறிமுறைகள் காணப்பட வேண்டும்.

எது எவ்வாறிருப்பினும் இணைய பாவனையில் தனியுரிமை பற்றிய உண்மைக்குப் புறம்பான விடயங்கள் பற்றி பலர் இன்னும் தெளிவற்ற நிலைப்பாட்டிலேயே காணப்படுகின்றனர், இவர்களில் ஒரு சாரார் தங்களுடைய இவை பற்றிய தெளிவின்மையால் தங்களுடைய தனியுரிமையை இழக்கும் துரதி'டவசமான நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

இணையவழிப் பாவனை சம்மந்தமான மிகப் பெரிய சவால் யாதெனில் பொது வாழ்வு மற்றும் தனிப்பட்ட வாழ்வு பற்றிய வரையறை மக்களிடத்தே காணப்படாமையாகும். அநேகமானவர்களுக்கு இவற்றுக்கிடையிலான வேறுபாட்டை புரிந்து கொள்ள முடியாத நிலை காணப்படுவது கவலைக்குரியது. இப்படியான சம்பவங்களை சமூக வலைத்தளப் பாவனைகளில் அதிகமாகக் காணப்படக்கூடியதாக உள்ளது. தனிப்பட்ட விடயங்களை பொது விடயங்களிலும் பொது விடயங்களை தனிப்பட்ட கருத்துக்களுடனும் குழப்பியடிக்கக்கூடிய நிலை இதில் காணப்படுவதை எம்மால் அவதானிக்க முடிகிறது.



[9] https://openinternet.global/about-open-internet-democracy-initiative

## டிஜிட்டல் பொறுப்புணர்வுகள்

“உயர் அதிகாரத்துடன் உயர் பொறுப்புக்களும் வர வேண்டும்” எனும் மிக பிரபல்யமான வாசகமானது ஸ்பைடர் மேன் எனும் கதையில் கூறப்பட்டிருப்பதை நாம் ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

இவ் உபதேசமானது டிஜிட்டல் தொழிநுட்பப் பாவனையாளர்களுக்கு மட்டுமல்லாமல் இணையதள பாவனையாளர்களுக்கும் பொருந்தக்கூடிய விடயம் ஒன்றாகும். இணைய மற்றும் டிஜிட்டல் வசதிகளை இலகுவாக அணுகக்கூடிய வசதி வாய்ப்பானது தேவையேற்படும் போது தேவையான விடயங்களை அணுகுவதற்காக மட்டும் இருக்காமல் மிக வேகமான முறையில் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையையும் உருவாக்கியுள்ளது. ஆகவே பொறுப்புணரச்சியுடன் கையாள்வது என்பது இவற்றுடன் சேர்ந்தே உண்மையாக வரவேண்டிய ஒரு விடயமாகும்.

ஆகவே இது ஒவ்வொரு மனிதனுடைய தனிப்பட்ட பொறுப்புக்களாகும். மேலும் இவை பல்வேறுபட்ட வகையில் பரந்தும் விரிந்தும் காணப்படுகிறது. ஏதோவொரு கலந்துரையாடல் ஒன்றின் மூலம் பின்வரும் விடயங்கள் பொறுப்புணர்வு என்ற வகைக்குள் வகைப்படுத்தப்பட்டன.

- மற்றவர்களின் பலவீனங்களை கொச்சைப்படுத்தல், தொந்தரவு கொடுத்தல் மற்றும் திருடுதல் பேன்றவற்றை அறியப்படுத்துவதற்கான பொறுப்புணர்வு
- ஆய்வுகள் மற்றும் விடயங்களை மீளத் தேடிப்பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களில் உறுதுணையானவற்றை மேற்கோள் காட்டுவதற்கான பொறுப்புணர்வு
- இசை, திரைப்படங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான விடயங்களை பதிவிறக்கம் செய்வதற்கான பொறுப்புணர்வு
- தகவல்களை திருடக்கூடியவர்களிடமிருந்து தரவு அல்லது தகவல்களை பாதுகாப்பான முறையில் வைத்திருப்பதற்கான பொறுப்புணர்வு.
- தங்களுடைய அடையாளங்கள் பற்றிய பொய்யான தகவல்களை வழங்காமல் இருப்பதற்கான பொறுப்புணர்வு

இன்னுமொரு கலந்துரையாடல் ஒன்றின் போது பின்வரும் வியடங்களை தனிநபர் ஒருவர் பொறுப்புள்ள பிரஜையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தெரியப்படுத்தப்பட்டன.

- இணையவழியில் கொச்சைப்படுத்தல் : மற்றவர்களுடன் இணையவழியில் எவ்வாறு தொடர்பாடலை பேண வேண்டும் என்பதற்கு நீங்களே பொறுப்பாளிகளாவர். மேலும் மற்றவர்களின் இணைய வழியிலான துஃபிரயோகங்களிலிருந்து உங்களைப் பாதுகாப்பதற்கு நீங்களே பொறுப்பாளிகளாவர்.
- இணையதள பாதுகாப்பு : தங்களுடைய தனிப்பட்ட பாதுகாப்பினை உயரிய நிலையில் வைத்துக்கொண்டு செயற்பட வேண்டும். எம்மில் அநேகமானோர் இணையதள பாதுகாப்பு என்றால் சிறுவர் பாதுகாப்பு, இணையதள கொச்சைப்படுத்தல் மற்றும் பாலியல் சூறையாடல் என்றே எண்ணுகின்றனர். ஆனாலும் இவை அவ்வாறான விடயங்களை விடவும் மிகவும் மேலானவை. எனவே நாம் எல்லோரும் இவை பற்றிய போதியளவான முன்னேற்பாடுகளையும் விழிப்புணர்வுகளையும் கொண்டிருக்க வேண்டும்.

- இணையதள பண்புகளுக்கு அல்லது மதிப்புகளுக்கு புறம்பான செயற்பாடுகள் : இணையதள கருத்துப் பரிமாற்றங்களின் போது விசைப்பலகையிலுள்ள சுருக்க வழி மொழிகளைப் பயன்படுத்துகிறோம். சில வேளைகளில் இந்த சுருக்கக் குறிகள் தொழில்வாண்மை உறவுக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய துர்ப்பாக்கிய நிலை உருவாக வழி வகுக்கலாம். உதாரணமாக "SHOUTING" என்று நாம் தட்டச்சு செய்யும் போது எல்லா எழுத்துக்களையும் கெப்பிட்டல் எழுத்துக்களில் எழுதுவது சிறப்பானதல்ல.
- தவறிழைத்தவர்கள் பற்றி அறிக்கையிடல் : டிஜிட்டல் பிரஜையொருவர் இணையதள தவறிழைப்பவர்களுடன் ஊடாட்டத்தில் ஈடுபடும் போது அவர்களை அந்த நிலையிலிருந்து மீட்டெடுக்கக் கூடிய நிலையை உருவாக்கலாம். இவ்வாறான நெறிமுறை தவறிய விடயங்களை பொறுப்புணர்வுடன் சம்பந்தப்பட்ட சேவை வழங்குனர்களுக்கோ அல்லது கண்காணிப்பாளர்களுக்கோ தெரியப்படுத்துவதன் மூலம் உரிய நேரத்திலேயே கட்டுப்படுத்தி இல்லாதொழிக்க முடியும். இடம் பெற்ற குற்றத்தின் தன்மை மற்றும் அதன் சூழ்நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் தலையீட்டின் மூலம் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியும்.
- சட்ட ரீதியான பாதுகாப்பு : இணையதள செயற்பாடுகளில் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதானது தாம் அந்நாட்டிலுள்ள இணைய பாவனை பற்றிய சட்ட நெறிமுறைகளை அறிந்து அவற்றைப் பின்பற்றுவதாகும். உதாரணத்துக்கு கூறுமிடத்து, உங்களுக்கு டிஜிட்டல் பதிப்புரிமை மற்றும் பிரசுரித்தல் பற்றிய சட்ட நடைமுறைகளைப் பற்றித் தெரியுமா? உங்களுக்கு மென்பொருட்களை கொள்ளையடிக்கும் இணையதளங்கள் பற்றி தெரியுமா? மற்றவர்கள் உங்களுடைய டிஜிட்டல் அடையாளங்களை திருடுவதிலிருந்து நீங்கள் எவ்வாறு உங்களைப் பாதுகாத்துக் கொள்வது?



## இணையத்தளத்தை எம் அயலவர் போன்று கவனித்தல்

ஜக்கி முர்ராய் எனும் அமெரிக்க பாடசாலையின் ஆசிரியரொருவர் நடுத்தர பாடசாலை மாணவர்களுக்கு சுமார் 20 வருட காலமாக தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பித்து வந்தார். இவர் டிஜிட்டல் பொறுப்புணர்வு நடைமுறைகளுக்கு பின்வரும் நடைமுறைகளை சிபாரிசு செய்கிறார்

ஒப்பீட்டு ரிதியாக பல நன்மைகளை ஏற்படுத்தக்கூடிய இணையதளத்தை எமது அயல்வீட்டார் என்று எண்ணிக் கொள்வோம்:

- உங்களது அயல் வீட்டார்களுடன் பழகுதைப் போன்று இணையதளத்துடனும் பழகுவதற்கு எண்ணுவோம்.
- உங்களுடைய தனிப்பட்ட விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். அதே போன்று மற்றவர்களுடைய தனிப்பட்ட விடயங்களையும் கேட்டறிய முனைய வேண்டாம். மற்றவர்களுக்கும் தனிப்பட்ட உரிமைகள் இருக்கிறது என்பதைப் புரிந்து நடந்து கொள்ளுங்கள்.
- உங்களுடைய சுற்றுச் சூழல் பற்றி மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் இணைய தளத்திற்குள் எங்கே இருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அதன்படி நடந்து கொள்ளுங்கள்.
- உங்களுடைய சமூகத்தைப் போன்றே, நீங்கள் அவர்களுடன் நன்றாக நடந்து கொண்டால் அவர்கள் உங்களுடன் மதிப்பும் மரியாதையுடனும் நடந்து கொள்வார்கள் .
- உங்களுக்கு பரீட்சியமில்லாத ஒருவரின் உதவி கிடைத்து விடும் என்று எண்ணாதீர்கள் -- அது ஒரு போதும் நடக்காது. உங்களை தனிப்பட்ட அடையாள எண் முகவரி முறை மூலம் அறிந்து கொள்ளலாம். அவை என்னவென்று கலந்துரையாடுங்கள்.
- உங்களுடைய அறிவாற்றல்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.மற்றவர்களுடன் ஒன்றிணைந்து இணைய வழியில் உதவுங்கள்.

Source: https://www.teachhub.com/technology-classroom-digital-rights-responsibilities

## சம்பவக் கற்கைகள்

### சம்பவக் கற்கை 01: இலங்கையில் முகப்புத்தகக் கணக்குகளில் உள்ள வெறுப்பூட்டும் வார்த்தைப் பிரயோகங்கள்

இணைய பாவனைகளில் இடம்பெறும் வெறுப்புணர்வைத் தூண்டும் வார்த்தைப் பிரயோகங்கள் பற்றிய அச்சுறுத்தல் விடுக்கும் செயற்பாடுகள் ஆண்டாண்டு காலமாக நடைமுறையில் இருந்தே வருகிறது. ஒரு சில ஆய்வாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைத்து முகப்புத்தகம் போன்ற சமூக ஊடகங்களில் அதிகரித்து வரும் வெறுப்பை ஏற்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்கள் பற்றிய விடயங்களைத் தொகுத்து ஆராய்ந்து ஆவணப்படுத்தினர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம (Centre for Policy Alternatives - CPA) 2014 ஆம் ஆண்டு உள்நாட்டில் மேற்கொண்ட ஆய்வின்படி : “இலங்கையில் அதிகரித்து வரும் வெறுப்பை ஏற்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்கள் இன்னுமொரு நிகழ்ச்சித் திட்டத்துக்கு எந்த வகையான உத்தரவாதத்தையும் வழங்காது. யுத்தத்துக்குப் பின்னர் மீண்டெழுந்து வரும் நாட்டில் சமூக, கலாசார, மத, இன நல்வாழ்வு மற்றும் வேறுபாடுகளை மதித்தல் போன்ற விடயங்களை நாங்கள் பார்க்கும் விடயத்தில் அரசாங்கத்துக்கும் அதன் நல்லாட்சிக்கும் மிகப் பெரும் சவாலாக அமைகிறது” என்று குறிப்பிட்டுள்ளது.

வன்முறையை திருப்திப்படுத்தல் எனும் தலையங்கமிடப்பட்ட அறிக்கையில்: இலங்கையில் முகப்புத்தகங்களில் இடம்பெறும் வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் பற்றிய ஒரு ஆய்வு இலங்கையில் 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அழுத்கம எனும் இடத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைக்கு முதல், நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மற்றும் நடைபெற்றவுடன் செயற்பட்ட 20 குழுக்களின் தனிப்பட்ட முகப்புத்தகக் கணக்குகளில் பதிவிடப்பட்ட விடயங்களை சில மாதங்களுக்கு பகுத்து ஆய்வு செய்து இந்த அறிக்கை உருவாக்கப்பட்டது. பொதுவாக இந்த ஆய்வானது குழப்பகரமான நிலையில் இணையத்தளத்தில் இடம்பெறும் வெறுப்பையேற்படுத்தும் பேச்சுக்கள் எவ்வாறு உருவெடுக்கிறது, என்ன வகையான கருத்துக்கள் உருவாக்கப்பட்டு பதிவிடப்படுகிறது, யாரால் யாருக்காக இவை உருவாக்கப்படுகிறது போன்ற விடயங்களை ஆராய்ந்து அறிக்கைப்படுத்தியது.

மாற்றுக் கொள்ளைகளுக்கான நிலையத்தின் ஆய்வறிக்கையின்படி, இலங்கையில் முஸ்லிம் மக்கள் 9 சத வீதமான சிறுபான்மையினராக காணப்படுவதன் விளைவாக இச்சமூகம் பலதரப்பட்ட இணைய வழி வெறுப்பூட்டும் பேச்சுக்களுக்கு ஆளாக வேண்டிய நிலைக்கு புறந்தள்ளப்பட்டு இருப்பதை சுட்டிக்காட்டிய அதேவேளை, மற்றைய சமூகங்களுக்கும் இவ்வாறான நிலை உருவாகியிருப்பதை சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறான சம்பவங்களுக்கு இலக்கு வைக்கப்பட்டவர்களாக மனித உரிமை ஆர்வலர்கள், நடுத்தர நிலையிலுள்ள அரசியல்வாதிகள், இன நல்லிணக்கத்துக்காக பாடுபடும் மத குருமார்கள், பெண்கள், பல் பாலின சமூகத்தினர் மற்றும் அதீத சிங்கள பௌத்தவாதத்துக்கு செவி சாய்க்காத இந்நாட்டுப் பிரஜைகளும் அடங்குவர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆராய்ச்சியாளர்களான சில்பா சமரதுங்க மற்றும் சஞ்சனா ஹொட்டொடுவ ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில் "முடிவாக, சமூக – அரசியல் குழப்பநிலைக்கு என்ன செய்வதென்று சரியானதொரு அறிவியல்சார் பொறிமுறையொன்று இல்லாமலுள்ளது" என்று கூறினர். இக்கருத்துக்கள் பின்வருவனவற்றை சாராம்சமாகத் தெளிவுபடுத்துகிறது: அதிக எண்ணிக்கையான பாவனையாளர்கள், மிகப் பெரும் எண்ணிக்கையிலான பதிவு உள்ளீடுகள் மற்றும் அதன் வித்தியாசத்தன்மை மற்றும் அவ்வாறான வெறுப்பூட்டும் பேச்சுக்கள் மிக வேகமாக பரவக்கூடிய தன்மை மற்றும் அதனைக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் பொறிமுறைகள் என்பனவாகும்.

இந்நிலையானது சில அரசாங்கத்தின் பிடிவாதமுள்ள அரசியல் நடவடிக்கைளினால் விமிர்சிக்கப்படுவது மாத்திரமல்லால் இதுவொரு சவால் நிறைந்த ஒன்றாகவும் உருவெடுத்துள்ளது.

More: https://www.cpalanka.org/liking-vilence-a-study-of-hate-speech-on-facebook-in-sri-lanka/

## சம்பவக் கற்கை 2 : இணையதள செயலிழப்பும் சமூக ஊடகங்களின் முடக்கமும்.

வலையமைப்பு செயலிழப்பு: எனப்படுவது வேண்டுமென்றே இணையதள நிரந்தர சேவைகளான நிரந்தர இணையதள கட்டமைப்பு, கையடக்கத் தொலைத்தொடர்பு வலையமைப்பு நிறுத்தல் அல்லது இவை இரண்டையும் ஒன்றாக மேற்கொள்ளல் போன்றவை அண்மைய காலங்களில் பல நாடுகளில் இடம்பெற்றிருப்பதை எம்மால் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இவ்வாறான நிலைமைகள் பிரஜையொருவரின் தகவல் தொடர்பாடல் உரிமைகளுக்கு மிகப் பாரதூரமான அச்சுறுத்தல்களாக அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவ்வாறு இடம்பெற்ற அநேக நிலைமைகளின்போது அரசாங்கம் ஏன் இவ்வாறான இணையதள முடக்கத்தை மேற்கொண்டது என்பதற்கான ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆதாரங்களை முன்வைக்கத் தவறியுள்ளது. எவ்வாறிருப்பினும் அவர்களால் முன்வைக்கப்பட்ட காரணங்களை நாம் பின்வரும் பிரிவுகளில் வகைப்படுத்தலாம். தேசிய பாதுகாப்பை நிலை நிறுத்தும் நோக்கத்துக்காக: தேர்தல் காலங்களில் நியாயமுள்ள தேர்தலொன்றை நடாத்துவதற்காக: கலவரங்கள் மற்றும் ஊர்வலங்களில் இடம்பெறக்கூடிய விடயங்களை தடுப்பதற்காக அல்லது பிரபல்ய பாடசாலைகளில் அல்லது பரீட்சைகளில் இடம்பெறக்கூடிய ஏமாற்று முறைகேட்டு விடயங்களை தடுப்பதற்கு எனக் கூறலாம்.

இணையதள முடக்கம் எனப்படும் விடயமானது இணையதள பாவனை உரிமைக்கான தரநிலையை கீழ்த்தரப்படுத்தும் ஒரு நடவடிக்கை என்றே நோக்கப்பட வேண்டும். சுதந்திர இல்லம் எனும் சர்வதேச கருத்துச் சுதந்திர மேம்பாட்டு நிறுவனமானது 2010 ஆம் ஆண்டு முதல் கருத்துச் சுதந்திரத்துகான உரிமைகள் மிகப் பாரியளவில் மறுக்கப்பட்டு வந்து கொண்டே இருந்ததாக சுட்டிக்காட்டியுள்ளது. சுதந்திர வலை எனும் அவர்களது வருடாந்த அறிக்கையில் உலகத்திலுள்ள 65 நாடுகளில் - அதாவது 87 வீதமான இணைய பாவனையாளர்களை உள்ளடக்கியதாக அமைந்தது. இதன்படி அரசாங்கத்தின் கொள்கை ரீதியான நடவடிக்கைகள் வருடத்துக்கு வருடம் கூடிக் குறைந்து கொண்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2018 ஆம் வெளியிடப்பட்ட வலையமைப்பில் சுதந்திரம் என்ற அறிக்கையின்படி,"இவ்வாறான முடக்கும் செயல்கள் இணையதளத்தில் தவறான செய்திகளைப் பரப்புதல் எனும் கொள்கையை மழுங்கடிக்கும் செயலாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது". மேலும் இவ்வாறான நிலைமைகளில் நகரங்களிலும் மாகாணங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வலையமைப்புத் தடுப்பானது மக்கள் தாம் மிக ஆபத்தான நிலையிலிருக்கும் போது அவை பற்றிய தெளிவான விளக்கங்களையோ அல்லது மேலதிகத் தகவல்களையோ தங்களுடைய உறவினர்கள், நண்பர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை மழுங்கடிக்கும் செயலாகும்" என்றும் குறிப்பிட்டுள்ளது.

இணையதள தடையானது தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் இதனால் ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் விளைவுகளும் மிதமாக அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இந்த விடயம் பல சமூக ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களினால் விபரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

“இணையதள நிறுத்தமானது பொருளாதார தொழில்நுட்ப மற்றும் உரிமைகள் தொடர்பான பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இவை இணையதள பாவனையாளர்களின் இணையதளம் மீதான நம்பிக்கையை குறைத்து மதிப்பிடும் செயலாகக் காணப்படுவது மட்டுமல்லாமல் உள்நாட்டு பொருளாதாரத்திலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகிறது. அது மாத்திரமன்றி நாட்டின் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையின் மீது அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயலாகவும் கணிக்கப்படுகிறது. கொள்கை வகுப்பாளர்கள் இவைகள் பற்றி அதீத கவனம் செலுத்துவதோடு பாதுகாப்பையும் முன்னுரிமைப்படுத்த வேண்டும் என்று இணையதள சமூகம் (Internet Society) தனது 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளியிட்டுள்ள தனது பொதுக் கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளது. 2019 ஜூன் வரையிலும் இலங்கையில் சுமார் 04 சமூக ஊடக முடக்கங்கள் இடம்பெற்றுள்ளன. முதலாவது சமூக ஊடக முடக்கமானது 2018 மார்ச் மாதம் இலங்கையின் கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையின் போது இடம்பிடித்தது. அடுத்ததாக 21 ஏப்ரல் 2019 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்களின் பின்னர் சுமார் தொடர்ச்சியாக 16 நாட்கள் மூன்று முறையாக பிரபல்ய சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டன. இவ்வாறான நிலையில் இந்த முடக்கமானது வெறுப்பூட்டும் பேச்சுக்களின் அளவு பெரிதாகக் குறைந்ததாகக் காணப்படவில்லை, கிடைக்கப்பெற்ற தரவு பகுப்பாய்வுகளின்படி மக்கள VPN போன்ற மாற்றுவழித் தளங்களைப் பயன்படுத்தி தொடர்ந்து பிழையான கருத்துக்களையும் தகவல்கள் பரிமாற்றத்திலும் ஈடுபட்டிருக்கின்றனர் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

More at: https://freedomhouse.org/report/freedom-net/freedom-net-2018/rise-digital-authoritarianism
https://www.internetsociety.org/wp-content/uploads/2017/11/ISOC-PolicyBrief-Shutdowns-20171109-EN.pdf

## கலந்துரையாடல்களுக்கான விடயங்கள்

இவை பற்றிய மேலதிகமான விடயங்களை அறிந்து கொள்ள இங்கு சில கேள்விகளும் கலந்துரையாடல் விடயங்களும் தரப்பட்டுள்ளன.

- இணைய வழி மற்றும் இணைய வழியற்ற பாவனைகளுக்கு இடையிலான வேறுபாடுகள் மீண்டும் மீண்டும் தொடர்பு படுத்தி கூறப்படுவதால் இதனை கூர்ந்து அவதானிக்க வேண்டியுள்ளது. உங்களுடைய டிஜிட்டல் தொழில்நுட்ப மற்றும் இணையதள அநுபவங்களின் அடிப்படையில் கலந்துரையாடவும்.

- சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தினைப் பற்றி குறிப்பாக தனியுரிமை பற்றி எடுத்துக்கூறும் உறுப்புரை 12 மற்றும் கருத்துச் சுதந்திரம் பற்றி தெரிவிக்கும் உறுப்புரை 19 பற்றியும் கலந்துரையாடவும்.

- கருத்துக்களை வெளியிடும் சுதந்திரமானது சிலவேளைகளில் மற்றவர்களை பாதிக்கும், கவலையளிக்க வைக்கும் அல்லது தொந்தரவு செய்யும் ஒரு விடயமாக மாறுவதனால் அது தனது பிரபல்யத் தன்மையை இழக்கிறது. நீங்கள் இக்கருத்துடன் உடன்படுகிறீர்களா?

- டிஜிட்டல் தனியுரிமை, கண்காணிப்பு மற்றும் மறைகுறியிடல் போன்றவை எவ்வாறு ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளது? முழுமையான இணையதள தனியுரிமைப் பாதுகாப்பானது எல்லா நேரத்திலும் சாத்தியமாகாது, ஆகவே நபர் ஒருவர் எவ்வாறு தன்னுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்?

- இணையதளம் பற்றி பெண்ணியல் கோட்பாட்டின் 17 பண்புகளும் பாதுகாப்பான, பொறுப்புணர்வுடன் கூடிய மற்றும் உபயோகமுள்ள பாவனையாளர்களாக மாற்றுவதற்கு எவ்வாறு உதவியளிக்கிறது?

- இணையதளத்தில் சுதந்திரம் எனப்படுவது ஐக்கிய அமெரிக்காவின் சுதந்திர இல்லம் எனும் அமைப்பினால் வருடாந்தம் வெளியிடப்படும் உலக இணையதள சுதந்திரம் பற்றிய அறிக்கையாகும். இணையதளத்தில் சுதந்திரத்தின் இறுதியாக வெளியிடப்பட்ட அறிக்கையைப் படித்த நீங்கள் அதில் உமது நாடு பற்றி கூறப்பட்ட விடயங்களுடன் ஒத்துப் போகிறீர்களா என்பதைக் கூறவும
https://freedomhouse.org/report-types/freedom-net

- அரசாங்கங்கள் (இலங்கை உட்பட) மேற்கொள்ளும் முழுமையான இணையதள முடக்கமானது அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக ஊடகங்கள் மீதான தடை அல்லது கலந்துரையாடல் வலைத்தளங்கள் தேசிய பாதுகாப்பு, சட்டத்தை நடைமுறைப்படுத்தல் அல்லது சுதந்திரமான தேர்தல் போன்ற காரணங்களை முன்னிட்டு இவ்வாறான தடைகளை விதிப்பது எந்த நிலையிலாவது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதா? கலந்துரையாடுக.

## கற்றுக் கொள்வதால் ஏற்படும் விளைவுகள்

இந்தப் பகுதியை கற்றறிந்ததன் பின்னர் பின்வரும் விடயங்கள் பற்றிய தெளிவுகளைப் பெறுவீர்கள்

- இணையதளத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து டிஜிட்டல் உரிமைகளும் மனித உரிமைகளே ஆகும். இந்த உரிமைகள் மேம்பாடானது உலகத்தில் இடம்பெறும் நிகழ்வுகளைப் பொறுத்தே இடம்பெறுகிறது.

- சில மனித உரிமைகள் இணையவழிப் பயன்பாட்டுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டு காணப்படுகிறது. அவை கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான உரிமைகள், தரவுகளைப் பாதுகாப்பதற்கான உரிமையும் தனியுரிமைகள் மற்றும் குழுக்களில் இணைவதற்கான உரிமைகள்.

- தற்காலத்தில் இணைய பாவனைகள் அதிகரித்திருப்பினும் (மனித சனத்தொகையின் அரைவாசிக்கும் மேற்பட்டோர் 2018 இல் பயன்படுத்தியுள்ளனர்) இவற்றைப் பயன்படுத்த இயலாதவர்களை அடைவது எமது முக்கிய இலக்காகும்.

- வெப்தள பாவனையும் இணையதள பாவனையும் இரு முனை சம்மந்தப்பட்ட விடயமாகும். மனித உரிமை மேம்பாட்டுக்கு இவை முக்கியமான விடயமாகக் காணப்பட்டாலும் இணையத் தள முடக்கம் மற்றும் அவற்றில் இடம்பெறும் பதிவுகளைத் தடுத்தல் மற்றும் கண்காணித்தல் போன்றவை பிடிவாத நிலையையே காட்டுகிறது.

- இணையதளம் மற்றும் இணைய வழியற்ற முறைகளிலும் வெறுப்பூட்டும் பேச்சுச் செயற்பாடுகள் மலிந்து காணப்படுகிறது. எனவே இவையிரண்டிற்கும் சமூகம் பொறுப்பான முறையில் பதிலளிக்க வேண்டும். சட்ட ரீதியான தர்க்கத்துக்கும் கருத்து மாறல்களுக்கும் இடம் கொடுத்து உலகுக்கு ஏற்படும் ஆபத்திலிருந்து எமது சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும்.

- வெறுப்பூட்டும் பேச்சுகளுக்கெதிரான சட்ட ஏற்பாடும் அவசியமானவை ஆனாலும் இவை போதுமான நிலையில் இல்லை. சட்ட ரீதியற்ற முறையான சமூகம் பற்றிய கல்வியறிவு, டிஜிட்டல் இலக்கியம் மற்றும் இணையவழி சமூகத்தின் அறிவை மேம்படுத்த வைப்பது வெறுப்புச் செயற்பாடுகளை தடுக்கும் சிறந்த வழி முறையாகும்.

- இணையதளமானது உலகளாவிய ரீதியிலும் எல்லோராலும் பயன்படுத்தக்கூடிய தளமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே உருவாக்கப்பட்டது. அதன் வடிவமைப்பானது எவராலும் தடுக்க முடியாதவாறு காணப்பட்டாலும் சில அரசாங்கங்கள் அவர்களது நாட்டுக்குள் அதனை ஊடறுத்து விடயங்களைத் தடுக்கவும் முடக்கவும் செயற்பட்டுள்ளது.

- இணையதளமானது உலகயாவிய தடையற்ற, பால் நிலை பாகுபாடற்ற, பாதுகாப்பான மற்றும் எல்லோராலும் பயன்படுத்தக்கூடிய இயங்குதளமாக காணப்பட வேண்டும் என்பதற்காக சிவில் சமூகக் குழுக்கள் தங்களாலான அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறது. இந்த விடயங்கள் கடந்த காலங்களில் இணையத்தள உரிமைகள் பட்டயம், இணையதளம் பற்றிய பெண்ணியல் கொள்கைகள் மற்றும் இன்னும் பல விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## மேலதிக வாசிப்புகளுக்காக

கருத்துச் சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் விசேட ஆணையாளரின் அறிக்கை
https://www.ohchr.org/en/issues/freedomopinion/pages/opinionindex.aspx

தனியுரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் விசேட ஆணையாளரின் அறிக்கை
https://www.ohchr.org/EN/Issues/Privacy/SR/Pages/SRPrivacyIndex.aspx

இணையத்தில் சுதந்திரம் : உலகளாவிய இணையதள சுதந்திரம் பற்றிய ஆண்டறிக்கை
https://freedomhouse.org/report-types/freedom-net

உலக இணையதள அறிக்கை 2017: டிஜிட்டல் எதிரகாலத்துக்கான பாதை, இணையதள சமூகம், 2017
https://www.internetsociety.org/globalinternetreport/

முன்னேற்ற தொடர்பாடல் அமைப்பு (Association for Progressive Communications (APC)
https://www.apc.org/

வன்முறையில் விருப்பம் கொள்ளல் : இலங்கையில் முகப்புத்தகங்களில் இடம்பெற்ற வெறுப்பை ஏற்படுத்தும் பேச்சுக்கள் பற்றிய ஒரு ஆய்வு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 2014.
https://www.cpalanka.org/liking-violence-a-study-of-hate-speech-on-facebook-in-sri-lanka/

உறுப்புரை 19 - டிஜிட்டல் உரிமைகள் பற்றிய தேடல் (கருத்துச் சுதந்திரம் மற்றும் குழுக்களுடன் ஒன்றிணைவதற்கான உரிமைகள்)
https://www.article19.org/issue/digital-rights/

Electronic Frontier Foundation (EFF)
https://www.eff.org/

ஐரோப்பிய கருத்துச் சுதந்திர இணையதளங்களின் குழு
https://www.coe.int/en/web/freedom-expression/internet-freedom1

ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் - தனியுரிமைகளுக்கும் கருத்துக்களை வெளியிடுவதற்குமான உரிமைகள்,
Privacy International இன் ஒரு ஆய்வு
https://privacyinternational.org/blog/1111/two-sides-same-coin-right-privacy-and-freedom-expression

## மேலும் சில வளங்கள்

**EROTICS:** பாலியல் மற்றும் இணையதளத்துக்கிடையிலான குறுக்கு வெட்டுத் தொடர்பு பற்றி ஆராயும் இணையத்தள ஆராய்ச்சியாளர்களின் வலையமைப்பு
https://erotics.apc.org/

**Gender and Internet Governance eXchange:** இணையதள பாவனை, கண்காணிப்பு மற்றும் அபிவிருத்திகளில் பெண்களின் பங்களிப்பு பற்றிய விடயங்களில் காணப்படும் இடைவெளிகளை இல்லாமல் செய்வதற்காக செயற்டுதல்
http://gigx.events.apc.org/en/home-page/

**Gender Evaluation Methodology:** பால்நிலை பற்றிய விடயத்தை அடிப்படையாகக் கொண்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை எவ்வாறு மதிப்பீடு செய்வது
http://www.genderevaluation.net/

**GenderIT.org:** பால்நிலை மற்றும் தொழில்நுட்பக் கொள்கை பற்றிய உலகின் முதலாவது இணையதளம
https://www.genderit.org/

**Take Back the Tech!** பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க மற்றும் தொழில்நுட்பங்களைக் கட்டுப்படுத்துவதற்குமான ஒரு அழைப்பு
https://www.takebackthetech.net/

